**யாழ்ப்பாணம் மாநகரசபை**
**யாழ்ப்பாண மாவட்டம்**

---

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 29 திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்ரெம்பர் 29 இல் சபையின் ஆணையாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, யாழ்ப்பாணம் மாநகரசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது பின்பற்றப்பட்டிருக்க வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(அ) சபைக்குச் சொந்தமான காணி கட்டிடங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு இறுதிக்கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளூராட்சி சேவை அலுவலர்களுடைய ஓய்வூதியங்களுக்கும் இளைப்பாற்று நயங்களுக்குமாக ஓய்வூதியப் பணிப்பாளருக்கு நடைமுறையாண்டு இறுதிவரை செலுத்த வேண்டியுள்ள ரூபா 115,492,502 ற்கு ஓய்வூதிய ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் செலுத்த வேண்டிய தொகைகள் பொறுப்பாக இறுதிக்கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட, உரிமை மாற்றம் செய்யப்படாத 46 வாகனங்கள் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்காமையினால் மோட்டார் வாகனங்களின் பெறுமதி கணக்குகளில் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

#### 1.3.3 பெறவேண்டிய கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 5 வருடத்திற்கு மேற்பட்ட ரூபா 7,112,085 இற்கான முற்பணம் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 138 ஓய்வூதியர்களிடமிருந்து 5 வருடத்திற்கு மேலாக அறவிடப்பட வேண்டிய ரூபா 663,200 கடன்மீதி இன்றுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான 03 சான்றுகள் இல்லாமையின் காரணமாக ரூபா 143,720 பெறுமதியான கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **(அ) 1987 ம் ஆண்டு மாநகர சபைக் கட்டளைச் சட்டம்** அத்தியாயம் 252 | |
| (i) பிரிவு 42 (1) | சபைக்குச் சொந்தமான 17 தற்காலிக கடைகளை நிரந்தரக் கடைகளாக அமைத்த போது அங்கீகாரமற்ற கட்டடங்கள் தொடர்பாக சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) பிரிவு 42(அ) | சபையின் எல்லையில் காணப்படும் 19 அங்கீகாரமற்ற தொலைத்தொடர்பு கோபுர கட்டட அமைப்புத் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 381(3) | காசோலைகளிற் கையொப்பமிடுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரினால் பிணை செலுத்தப் பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 571 | இருவருடங்களை மிகைத்துள்ள ரூபா 4,453,860 பெறுமதியான நானாவித வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 849(2) | ரூபா 40,655 சர்வதேச அழைப்புக் கட்டணம் சபை நிதியில் செலுத்தப்பட்டுள்ளது. |
| (இ) பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்று நிருபம் 10 ஒக்டோபர் 1990 ஆம் திகதிய 41/90ஆம் இலக்கம் | சபைக்கு சொந்தமான 36 வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின்படி 2016 திசெம்பர் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டெழும் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 143,963,688 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டில் மீண்டெழும் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 144,760,154 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 796,466 ஆல் குறைவடைந்துள்ளமையைக் காட்டுகின்றது.

**2.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் தேறிய மிகையாக ரூபா 90,749,375 விளைந்திருந்ததுடன் நேரொப்பான முன்னைய ஆண்டில் தேறிய மிகையாக ரூபா 134,707,047 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 43,957,672 ஆல் குறைவடைந்துள்ளமையைக் காட்டுகின்றது.

**2.3 தொழிற்படுமூலதன முகாமைத்துவம்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படுமூலதனம் ரூபா 669,060,896 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படுமூலதனம் ரூபா 581,228,518 விளைந்திருந்தது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான தொழிற்படுமூலதனம் ரூபா 87,832,378 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

**2.4 வருமான நிர்வாகம்**

**2.4.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

ஆணையாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2016 மதிப்பிடப்பட்டது | 2016 உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா “000” | ரூபா “000” | ரூபா “000” |
| இறைகளும் வரிகளும் | 60,800 | 74,086 | 77,968 |
| குத்தகை வாடகைகள் | 90,292 | 78,669 | 5,932 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 22,405 | 20,450 | 2,968 |
| ஏனைய வருமானங்கள் | 84,253 | 634,230 | 362,073 |
| **மொத்தம்** | **857,750** | **807,435** | **448,941** |

**2.4.2 ஆதனவரி**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருமானப் பரிசோதகரினால் குறிப்பிட்ட ஆண்டிற்கான ஆதனவரி நிலுவைக் கட்டணம் செலுத்தாதோரின் அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆதனவரி நிலுவையாக ரூபா 77,968,600 இன்றுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.4.3 குத்தகை மற்றும் வாடகை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்கு சொந்தமான 196 கடைகள் மரபுவழியாக உரிமை மாற்றம் செய்யப்பட்டதேயன்றி சட்டரீதியாக பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குத்தகை நிலுவையாக ரூபா 1,232,634 இருந்தபோதிலும், இன்றுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) கடை வாடகையாக ரூபா 1,733,302 இன்றுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.4.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சந்தைக்கடை உரிமம் ரூபா 283,734 அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வியாபார உரிமமும் வியாபாரவரியுமாக ரூபா 671,961 இன்றுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.4.5 முத்திரைக்கட்டணம்**

காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறவேண்டிய முத்திரைக்கட்டணம் ரூபா 260,271,306 இன்றுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையில் 1250 பதவியினருக்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தபோதும் 1106 பதவியினரே கடமையாற்றுகின்றனர். 146 பதவியினர் பற்றாக்குறையாகவும் 02 பதவியினர் மேலதிகமாகவும் உள்ளனர்.

(ஆ) (i) கல்வித் தகைமையற்ற மின்னியலாளர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் தொழில் தகைமை இல்லாத மின்னியலாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தீயணைப்பாளர் சேவைக் குறிப்பின் 16.3 இன் பிரகாரம் 3 வருடங்களினுள் கல்வித்தகையினைப் பூர்த்தி செய்ய வேண்டுமென குறிப்பிடப்பட்டு நியமனம் வழங்கப்பட்டிருந்தபோதும் அவற்றுள் 03 நியமனதாரர்கள் குறிப்பிட்ட கல்வித்தகமையை இன்றுவரை பூர்த்தி செய்யவில்லை.

(இ) மின்சாரப் பகுதிக்குரிய ரூபா 3,710 பெறுமதியான காசுச் சோர்வு மற்றும் ரூபா 21,222 பெறுமதியான திரும்பிய காசோலைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படாது ஐந்து வருடத்திற்கு மேலாக தொடர்ந்தும் முற்பணக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஈ) வங்கிகளில் வைப்பில் இடும்போது அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளிலேயே வைப்பிலிடப்பட வேண்டும். எனினும் தனியார் வங்கியில் (commercial Bank) ரூபா 21,653,627 வைப்பிலிடப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

(உ) (i) வேலைத்தள பகுதியின் வருடாந்த பொருட்கணக்கெடுப்பு அறிக்கையில் 275 வகையான பொருட்கள் பற்றாக்குறையும் 76 வகையான பொருட்கள் மிகையும் காணப்படுகின்றது.

(ii) பொது நூலகத்தில் 1741 புத்தகங்கள் தொலைந்துள்ளதாக கணிப்பீட்டு சபை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒதுக்கங்கள் ரூபா 132,825,506 பயன்படுத்தப்படாதுள்ளது.

(ii) நகர அபிவிருத்தி அதிகார சபை நிதி ரூபா 9,060,635 பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை.

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வாடகைக்கு வாகனம் பயன்படுத்திய வகையில் சபைநிதி மூலம் 2012 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ரூபா 611,000 இன்று வரை தீர்வு செய்யப்படவில்லை.

(ஆ) கஸ்தூரியார் வீதியில் கடை கட்டடத் தொகுதியை அமைக்கும் திட்டத்திற்காக மாநகரசபைக்கு சொந்தமான காணியில் தனிநபர் மூலம் கடைத் தொகுதிகளைக் கட்டுவதற்கு உரிய அனுமதி பின்வருவோரிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

(i) உரிய அமைச்சு
(ii) யாழ்ப்பாணம் மாநகரசபை
(iii) உல்லாசத்துறை
(iv) மத்திய சுற்றுச் சூழல் அதிகார சபை
(v) நகர அபிவிருத்தி அதிகாரசபை

**3.4 குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

சபையின் 17 வாகனங்கள் பயன்பாடற்ற நிலையில் காணப்படுகின்றது.

**3.5 இனங்காணப்பட்ட நட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பிக்கப் வாகன விபத்து தொடர்பில் தாபனவிதிக்கோவை அத்தியாயம் XLVIII (1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2016 ஆம் ஆண்டில் மாநகர சபையின் முகாமைத்துவ உதவியாளரால் ரூபா 2,934,429 கையாடப்பட்டுள்ளது. இத்தொகையில் ரூபா 320,000 மட்டுமே மீளப்பெறப்பட்டதுடன் மீதி தொகை ரூபா 2,614,429 வினை சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.6 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 1,371,756 பெறுமதியான கட்டம் - I ற்கான மாநகர சபையால் நிறைவேற்றப்பட்ட வேலையை சான்றுறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கட்டம் - II இல் மேற்கொள்ளப்பட்ட வேலையில் அளவையும் அதன் பெறுமதி ரூபா 5,096,340 இனை கணக்காய்வில் உறுதிப்படுத்தமுடியவில்லை.

(இ) ஒப்பந்தகாரரினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 14,440,804 பெறுமதியான காக்கைதீவு கழிவுநீர் சுத்திகரிப்பு வேலையானது நிறைவேற்றப்பட்ட வேலையை விட மிகையாக செலுத்தியிருந்தமையால், ரூபா 399,349 மேலதிக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) ஒப்பந்தகாரரால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 5,096,340 பெறுமதியான மாநகரசபையின் தீயணைப்பு பிரிவு கட்டட தொகுதி நிர்மாண வேலை கட்டம் III ற்கான கட்டட வேலையில் நிறைவேற்றப்பட்ட வேலையை விட மிகையான கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 303,488 இற்கான மேலதிக கொடுப்பனவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**3.7 செயற்திட்டத்தின் தாமதம்**

மீளாய்வாண்டில் நிறைவேற்ற வேண்டிய ரூபா 9,417,842 பெறுமதியான 4 மூலதன வேலைத்திட்டங்கள் இன்றுவரை முடிக்கப்பட்டிருக்கவில்லை.

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

நிதியாண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று சபையினால் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

**செலவினக் கட்டமைப்பு**

பாதீட்டுச் செலவினங்களுக்கும் உண்மைச் செலவினங்களுக்கும் இடையே ரூபா 41,608 தொடக்கம் ரூபா 50,206,032 வரையான செலவின வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

**5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் பரப்புகளில் அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) வருமான சேகரிப்பு
(ஆ) நிலையான சொத்துக்கள்
(இ) கணக்கீடு
(ஈ) ஆளணி
(உ) நன்கொடை
(ஊ) வாகனங்களின் பயன்பாடு
(எ) நானாவித வைப்புக்கள்
(ஏ) வரவு செலவுத்திட்டம்